செ.வெ.எண். 327

நாள் - 14/06/2021

<u>பத்திரிகைச் செய்தி</u>

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் கட்டுப்பாட்டில் செயல்படும் தஞ்சாவூர் விற்பனைக்குழுவிற்கு உட்பட்ட கும்பகோணம், திருப்பனந்தாள் மற்றும் பாபநாசம் ஆகிய ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களின் மூலம் இவ்வாண்டு பருத்தி மறைமுக ஏலம் ஜுன் மாதம் மூன்றாம் வாரத்தில் தொடங்க இருக்கின்றது. இந்த ஏலத்தின் போது பருத்தி கொள்முதல் செய்ய இந்திய பருத்திக்கழகத்தினர், உள்ளூர் மற்றும் வெளியூர் வணிகர்கள் கலந்துக்கொள்ள உள்ளனர். எனவே பருத்தி விவசாயிகள் கரோனா தடுப்பு நடவடிக்கை மற்றும் சமூக இடைவெளியை கடைபிடித்து தங்கள் விளைபொருளினை தங்கள் பகுதிக்கு அருகில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு காலை 09.00 மணி அளவில் கொண்டு சென்று கொள்முதல் நடைபெறும் நாட்களில் மறைமுக ஏலத்தில் கலந்துக்கொண்டு விற்பனை செய்து பயன்பெற கேட்டுக்கொள்ளப்படுகிறது.

| வ.எண் | ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் | பிரதி வாரம் - நாள் / நேரம் |
|---|---|---|
| 1 | கும்பகோணம் | புதன்/ 11.00 (மு.ப) மணி |
| 2 | திருப்பனந்தாள் | வியாழன்/ 11.00 (மு.ப) மணி |
| 3 | பாபநாசம் | வெள்ளி /11.00 (மு.ப) மணி |

அதிகபட்ச விலை கிடைக்க தங்கள் பருத்தியினை நன்கு நிழலில் உலரவைத்து, அதில் உள்ள தூசு போன்ற பொருட்களை நீக்கி, தரமான பருத்தியினை விற்பனைக்கு கொண்டு வந்து, ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் உள்ள வசதிகளை பயன்படுத்தி கொண்டு, நல்ல விலை பெற்று பயன்பெற கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் விவரங்களுக்கு தங்கள் அருகில் உள்ள கும்பகோணம் (0435-2481285) பாபநாசம் (04374-222423) மற்றும் திருப்பனந்தாள் (0435-2456447)ஆகிய ஒழுங்குமுறை விற்பனைக்கூடப் பொறுப்பாளர்களை அணுகி உரிய தகவல்களை பெற்றுக்கொள்ளலாம்.

மாவட்ட ஆட்சியர்,
தஞ்சாவூர்.

(2/2)